புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019

எளிய கையேடு

Regd No:34/2005

வெளியீடு

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம்

Gudalur CONSUMER HUMAN RESOURCE & ENVIRONMENT PROTECTION Center CCHEP_NLG

தமிழ்நாடு அரசின் மாநில அங்கீகாரம் பெற்றது

அங்கீகாரம் எண் நுபா2.22881-2013.

பந்தலூர், பந்தலூர் (Po & Tk) நீலகிரி CCHEP _ NLG Pandalur, The Nilgiris - 643 233.

Web: www.cchepnlg.blogspot.com www.cchepeye.blogspot.com.

Email : cchepnlg@gmail.com, cchepnlg5@gmail.com cchepnlg3@gmail.com, cchepnlg2@gmail.com ccc.nilgiris@gmail.com cchep.siva@gmail.com

https://www.facebook.com/cchepnilgiris https://www.facebook.com/cchepnlg2

புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019

முன்னுரை

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இந்தியாவிற்குப் புதிதல்ல. சரித்திர ஏடுகளை நாம் புரட்டிப் பார்த்தோமே -யானால், நுகர்வோர் பாதுகாப்பு இந்தியப் பொருளாதாரத்தின் ஓர் அங்கமாகவே எல்லாக் காலங்களிலும் இயங்கி வந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

சாணக்கியர் இயற்றிய "அர்த்தசாஸ்திரம்'' என்ற நூல் இதனை நமக்குத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. பொதுமக்கள் விலைவாசி உயர்வால் துன்பப்பட்டால், அதற்குக் காரணமான வர்த்தகர்கள் கடும் தண்டனைக்கு உள்ளானார்கள். சேவையாளர்களுக்கு கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டன. வர்த்தகர்களுக்கு இலாபத்தின் அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டது.

சுமார் 2400 ஆண்டுகளுக்கு முன்னரே, தரக்குறைவான பொருட்களை விற்கும் வணிகர்களுக்கு பொருட்களின் விலையை விட எட்டு மடங்கு அபராதம் விதிக்கப்பட்டது. பின்னர் அந்நியப் படையெடுப்பால், சீரான ஒழுங்குமுறை பின்பற்றப்படாமல், நுகர்வோர் பல துன்பங்களுக்கு ஆளானார்கள்.

இந்தியா அடிமைப்பட்டிருந்த காலத்தில், சுதந்திரத்திற்கு முன்னால் இந்திய பீனல் கோட் (1860) சட்டத்தின்படி விவசாயம் பாதுகாப்புப் பெற்றது.

பின்னர், 1940-ஆம் ஆண்டு மருந்துகளைப் பாதுகாப்பதற்காக ட்ரக்ஸ் அண்ட் காஸ்மெடிக்ஸ் ஆக்ட் கொண்டு வரப்பட்டது. பின்னர் இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனால் அவை எல்லாம் நுகர்வோர் சிவில் நீதிமன்றங்களை அணுகி தங்கள் புகார்களுக்குத் தீர்வு காண வேண்டியிருந்தது.

1972ஆம் ஆண்டு வரலாறு காணாத விலைவாசியேற்றமும், சோப்புகளுக்கும் உணவு பொருட்களுக்கும் கூட கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. கலப்படம் எங்கும் பரவியதை சினிமா பாடல்களில் கூட எதிரொலித்தது.

நுகர்வோர் தங்களுக்குள் குழுக்கள் அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தார்கள். இதுபோல் சுமார் இருபதிற்கும் மேற்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு சங்கங்கள் 1972 ஆம் ஆண்டு முதல் இந்தியா முழுவதும் தோன்றத் தொடங்கியது. எட்டு ஆண்டுகளுக்குப் பின்னும் நுகர்வோர் பிரச்சனை தீருவதாக தெரியவில்லை. உணவின் தரம், பாதுகாப்பு, மற்றும் சுற்றுப்புறச் சூழல்களினால், நுகர்வோருக்கு பிரச்சனைகள் அதிகமாகிக் கொண்டே இருந்தன.

எனவே அந்தக் குழுக்கள், அரசாங்கத்தை வற்புறுத்தி, நுகர்வோருக்கென்று தனியாக, சட்டம் இயற்றச் செய்தது. இந்தியப் பாராளுமன்றமும், பல்வேறு குழுக்கள், கொடுத்த பரிந்துரையையொட்டி 1986ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றியது.

இந்த சட்டம் உலகத்தில் சில நாடுகளில் மட்டுமே இயற்றப்பட்டது. அதில் ஒன்றான இந்தியா, தனித் தன்மையான தனி நபர் பாதுகாப்பிற்காக, தரமற்ற பொருட்கள், தரமற்ற சேவையாளர்களை தண்டிக்கவும், நுகர்வோருக்கு நீதி வழங்கவும் இயற்றப்பட்ட மிகச் சிறந்த சமுதாய நலச் சட்டமாகும். அதன் மூலம் நுகர்வோர்கள் பெரிதும் பயன்பெற்றனர். தற்போதைய சூழலில் உள்ள நிலைக்கு ஏற்ப சட்டத்தில் மாற்றம் செய்யபட்டு புதிய நுகர்வோர் பாதுகாப்பு 2019 உருவாக்கப்பட்டுள்ளது,

தற்போதும்மக்களில் பெரும்பாலோர் இந்த சட்டத்தையும் அதன் நன்மைகளையும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவே, இந்த நுகர்வோர் சட்ட கையேடு.

நுகர்வோர் மனதில் எழும் கேள்விகள்

நுகர்வோர் யார்?

நாம் எல்லோரும் நுகர்வோரே. பிறக்கும்போதும், வாழும்போதும் ஏன் இறந்த பின்னரும் நாம் நுகர்வோர் தாம். ஏனென்றால், நாம் பயன்படுத்தும் ஒவ்வொன்றிற்கும், விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. பொருளானாலும், சேவையானாலும், காசு கொடுத்துதான் வாங்குகிறோம். தற்போது குழந்தைக்கு, தண்ணீர் கூட விலை கொடுத்துதான் வாங்குகிறோம்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 - ன் படி யார் காசு கொடுத்து பொருளையோ, சேவையையோ வாங்குகிறார்களோ அவர்கள் நுகர்வோர்கள். "எந்தப் பொருளையும் வாங்குவோர்" மற்றும் "எந்தச் சேவைகளையும் பெற்றாலோ அல்லது வாடகைக்கு எடுத்து பயன்படுத்தினாலோ அல்லது என்ற நேரடியாக அல்லது ஆன்லைன் பரிவர்த்தனைகளை மின்னணு வழிகளில் அல்லது டெலிஷாப்பிங் அல்லது நேரடி விற்பனை அல்லது பல நிலை சந்தைப்படுத்தல் மூலம் உள்ளடக்கியது மூலம் பயன்பெறுவோர் அனைவரும் நுகர்வோர் என்கிறது. விரிவாகச் சொல்வதானால்,

(அ) காசு கொடுத்து பொருள் வாங்குகிறவர், நுகர்வோர்.

(ஆ) காசு கொடுத்து சேவையை அனுபவிக்கிறவர், நுகர்வோர்.

(இ) பொருளுக்கு விலை கொடுக்கப்பட்டிருந்தால், பொருளை ஆள்பவர் நுகர்வோர். உதாரணமாக குழந்தைக்கு, பால் பவுடர், தந்தை காசு கொடுத்து வாங்கினாலும், அதை அனுபவிக்கும் குழந்தைதான் நுகர்வோர்.

(ஈ) காசு கொடுத்து சேவையை வாங்காவிட்டாலும், காசு கொடுத்தது எவராக இருந்தாலும், சேவையை அனுபவிப்பவர் நுகர்வோர். உதாரணமாக, மகன், மகளுக்கு மருத்துவ சிகிச்சைக்காக, தந்தை பணம் கொடுத்தாலும், மருத்துவ சிகிச்சை பெற்ற மகன், மகள் இருவரும் தான் நுகர்வோர்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், பொருள், சேவை இரண்டிற்கும் காசு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

தரமற்றப் பொருள் என்றால் என்ன?

சிறிய அல்லது பெரிய குறைபாடு, முழுமை பெறாத, தரக்குறைவான, எடைக் குறைவான, இந்திய பொருள் பாதுகாப்பு சட்டங்களுக்கு உட்படாததான பொருட்கள் பொதுவாக ஓர் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரை பொருட்களுக்கு உத்தரவாதம் அவைகளின் தரத்திற்கு கொடுக்கப்படுகிறது. இந்த உத்திரவாத ஆண்டுகள் முடிவதற்கு முன், பொருட்களில் தரக்குறைவு கண்டால், அது தரமற்றப் பொருள் வரிசையில் சேர்க்கப்படும்.

சேவைக் குறைபாடு என்றால் என்ன?

சேவைக் குறைபாடு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் காசு கொடுத்து, சேவை பெற்றுக் கொள்வது. சேவையில், வாக்களித்தபடி சேவை கொடுக்கப்படாமல், இன்னல்களுக்கு ஆளாக்குவது. உதாரணமாக, பேருந்துப் பயணத்தின் போது, காசு கொடுத்தே பேருந்தில் பயணிக்கிறோம். அவ்வாறு பயணிக்கும்போது, ஓட்டுநர், நடத்துனர் நம்மை தரக்குறைவான வார்த்தைகளால் ஏசும் போது, அது சேவைக் குறைபாடு ஆகிறது. இதில் தொலைபேசி, காப்பீடுகள், மருத்துவம், அஞ்சலக, போக்குவரத்து சேவைகள், உணவு விடுதி சேவைகளும் அடங்கும்.

பொருள் பொருள் என்பது 1930 ஆம் ஆண்டின் "பொருள்கள் விற்பனைச் சட்டத்தில்" விளக்கப் பட்டபடியான பொருளாகும்.

தயாரிப்பாளர்

(1) ஒரு பொருளை, அல்லது அதற்குரிய பாகங்களை உற்பத்தி செய்பவர், அல்லது

(2) எந்தப் பொருளையும் தான் உற்பத்தி செய்யாமல், பிறரிடமிருந்து வாங்கிய வெவ்வேறு பாகங்களைப் பயன்படுத்தி ஒன்றுசேர்த்து, உருவாகும் பொருளைத் தன் தயாரிப்பு என்று கூறுபவர் அல்லத

(3) வேறு ஒருவர் உற்பத்தி செய்த பொருளின் மீது தனது முத்திரையைப் பதித்து அல்லது பதிக் கச் செய்து அதைத் தான் தயாரித்த பொருளென்று கூறுபவர் ஆகிய அனைவரும் தயாரிப்பாளர் என்று கருதப்படுவர்

(4) ஒரு தயாரிப்பாளர், தான் தயாரித்த பாகங்களை, உதிரியாகத் தனது கிளை அலுவலகத்திற்கு அனுப்பி, அந்தக் கிளை அலுவலகம் அந்த உதிரிபாகங்களை இணைத்துப் பொருளை உருவாக்கி விற்பனை செய்தாலும், மற்றவர்களுக்கு அனுப்பினாலும், அந்தக் கிளை அலுவலகம் அந்தப் பொருளின் தயாரிப்பாளராகக் கருதப்பட மாட்டாது.

குற்றம் சாட்டுபவர் (புகார் செய்பவர்)

- நுகர்வோர், அல்லது
- கம்பெனிகள் சட்டம் 1956 (1956) அல்லது நடைமுறையில் உள்ள வேறு ஏதாவது சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட, தன்னார்வ நுகர்வோர் அமைப்பு அல்லது
- புகார் செய்யும் மத்திய அரசு அல்லது மாநில அரசு, அல்லதுஒத்த நோக்கமுள்ள ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நுகர்வோர், ஆகியோர் குற்றம் சாட்டுபவராக இருக்கலாம்.

புகார் (குற்றச்சாட்டு) ஒரு வியாபாரி கடைப்பிடிக்கும் முறையில்லா வர்த்தகச் செயல், ஒருவர் வாங்கிய பொருளில் உள்ள குற்றம் குறைகள், ஒரு சேவையில் எந்த விதத்திலாவது இருந்த குறைபாடுகள் ஆகியவற்றைக் குறித்து எழுத்து மூலம் அறிவிப்பது "நோட்டீஸ்' ஆகும்.

ஒரு பொருளை விற்பவர், அந்தப் பொருளுக்கு விலையாக, நடைமுறையில் உள்ள சட்டப்படி விதிக்கப் பட்ட விலை, அந்தப் பொருளின் மீது அல்லது அந்தப் பொருளின் உறை யின் மீது போடப்பட்டுள்ள விலை ஆகியவற்றுக்கு மேல் அதிகம் கேட்டாலும் அவர் குற்றச்சாட்டுக்கு உரியவராவார்.

விற்கப்படும் பொருள், உபயோகப்படுத்தும் சமயத்தில், உயிருக்கோ பாதுகாப்புக்கோ ஆபத்து விளைவிக்கக் கூடியதாக இருந்தால், அந்தப் பொருளின் தன்மையைப் பற்றியும், அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும், எதற்குப் பயன்படுத்த வேண்டும் என்பன பற்றியும், நடைமுறையில் உள்ள சட்டம் குறிப்பிடும்படி முன்னறிவிப்போ எச்சரிக்கையோ செய்யாமலும், அந்தச் சட்டத்தின்படி கிடைக்கக்கூடிய நிவாரணங்களை

உபயோகிப்பவர் பெறுவதற்கு வசதி செய்யாமலும் ஒருவர் விற்பது குற்றச்சாட்டுக்கு உரிய செயலாகும்.

சேவை சேவை என்பது, வங்கிப்பணிகள், நிதி நிறுவனப் பணிகள், இன்ஷூரன்ஸ், போக்குவரத்து, சீரமைப்பு, மருத்துவமனைகள், மின்சாரம் வழங்குதல் சமையல் வாயு வழங்குதல், ஓட்டல் தொழில், வீடு கட்டுதல், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், விளையாட்டு வசதிகள், முதலிய எல்லா விதமான பணிகளையும் உள்ளடக்கியதாகும். ஆனால் இப்பணிகள் இலவசமாகச் செய்யப்பட்டாலோ, தனிநபர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் (வேலைகொடுப்பவர் வேலை செய்பவர் போன்றவை) செய்யப்பட்டாலோ அது நுகர்வோர் நிவாரணம் பெறக்கூடிய சேவையாகாது.

குறிப்பு மேற்கூறப்பட்ட சேவைகள் உதாரணத்திற்காகக் கொடுக்கப்பட்டவையே. கட்டணம் / விலை பெற்றுச் செய்யப்படும் எல்லா வகைச் சேவைகளும் இச்சட்டத்தில் அடங்கும்.

புகார் எங்கே செய்ய வேண்டும்? புகாரின் தன்மையைப் பொறுத்து, மாவட்ட, மாநில, தேசிய நுகர்வோர் குறை தீர் ஆணையங்களிடம் புகார் செய்யலாம்

நீங்கள் கோரும் மொத்த ஈட்டுத்தொகை

- ரூ.1 கோடிக்குள் இருந்தால் மாவட்ட நுகர்வோர் ஆணையத்தில் புகார் பதிவு செய்ய வேண்டும்.
- ரூ.1 கோடிக்கு மேல், ரூ. 10 கோடிக்குள் இருந்தால் மாநில நுகர்வோர் ஆணையத்திலும் புகார் பதிவு
- ரூ.10 கோடிக்கும் மேலானால், உங்கள் புகாரைப் புதுடில்லியில் உள்ள தேசிய நுகர்வோர் ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும்.

நுகர்வோர் ஆணையங்களின் தடையுத்தரவு பிறப்பிக்க அதிகாரம் உண்டா?

நுகர்வோர் பாதுகாப்பு திருத்தச் சட்டம் 2002- இன்படி தேசிய, மாநில நுகர்வோர் ஆணையங்கள் தங்கள் தலைமையகத்திற்கு வெளியேயும் செயல்படலாம். தடை உத்தரவு பிறப்பிக்க இந்த திருத்தம் வழி செய்கிறது.

மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் என்றால் என்ன? இந்தியாவில், பெரும்பாலான மாவட்டங் களில் நுகர்வோர் குறைதீர்ப்பதற்காக மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் அமைக்கப் பட்டுள்ளன

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் என்றால் என்ன? இந்தியாவில் அனைத்து மாநிலத்திலும் மாநில நுகர்வோர் குறை தீர் ஆணையங்கள் இயங்குகின்றன.

தேசிய நுகர்வோர் குறை தீர் ஆணையம் என்றால் என்ன? இந்தியாவில், தேசிய நுகர்வோர் குறை தீர் ஆணையம் இந்தியத் தலைநகர் தில்லியில் செயல்படுகின்றது.

நுகர்வோர் ஆணையத்தில் யார் யார், புகார் செய்யலாம்?
எந்தத் தனி நபரும், எந்த நுகர்வோர் அமைப்புகளும், புகார் செய்யலாம்.

வழக்கறிஞர் குறைதீர் ஆணையத்தில் வாதாடத் தேவையா? கட்டாய தேவையில்லை. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 இன் மிகச்சிறந்த பிரிவு இதுதான். இதன் மூலம் நுகர்வோரே தங்கள் புகார்களை மிகச் சிறந்த முறையில், தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முன் வாதாடலாம். ஆனால் துரதிருஷ்டவசமாக, எதிர் தரப்பினர் வழக்குரைஞர்களை வைத்து, வாய்தாக்கள் வாங்கிக் கொண்டே, புகார்கள் இழுத்தடிக்கப்படுகின்றன. இந்நிலை மாற எதிர் தரப்பினரே வந்து வாதாட வேண்டும் என்று சட்டத் திருத்தம் கொண்டு வந்தாலொழிய நுகர்வோர் வழக்குகளின், கால தாமதத்தைத் தவிர்க்க முடியாது. தனிநபர்கள் தற்போது பெரிய நிறுவனங்களுடன் போட்டி போட முடிவதில்லை. பெரும்பாலான புகார்கள், ஒரு நாள் அல்லது ஒரு வாரத்திலேயே, தீர்க்கப்பட வேண்டியதாக, எளிதான புகார்கள் தாம்.

புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்... 2019 10 முக்கிய அம்சங்கள்!

இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986, இந்தியாவில் வாழும் மக்களின் நுகர்வுத் தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்டது. கடந்த முப்பது ஆண்டுகளில் வர்த்தகத்தின் வளர்ச்சியானது எதிர்பாராத பல மாற்றங்களைக் கண்டிருக்கிறது. இந்த மாற்றங்களுக்கேற்ப நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை, நுகர்வோர் நலனைக் கருத்தில்கொண்டு செயல்படும் அமைப்பும் அரசாங்கமும் நன்கு உணர்ந்திருந்தன.

இதன் விளைவாக, பழைய சட்டத்துக்கு மாற்றாக, 'இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019' என்னும் புதிய சட்டம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தற்போது நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இதிலுள்ள 10 முக்கிய அம்சங்கள் இனி...

1. ஒழுங்குமுறை ஆணையம் செபி, ஐ.ஆர்.டி.ஏ.ஐ போன்ற ஒழுங்குமுறை ஆணையங்கள் இருப்பதைப்போல, நுகர்வோர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் ஒழுங்குமுறை ஆணையம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் நுகர்வோர் பாதுகாப்பை உறுதிசெய்ய மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் குழுக்கள் இருந்தாலும் இவற்றுக்குப் போதுமான அதிகாரம் இல்லையென்பதால், புதிய ஒழுங்குமுறை ஆணையம் அமைக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த அமைப்புக்கு அனைத்து மண்டலங்களிலும் அலுவலகம் இருக்கும். வாடிக்கையாளர்கள் புகார்மீது விசாரணை நடத்தி, இழப்பீடு வழங்குவதற்கு இந்த ஆணையத்துக்கு அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது. மேலும், பொருள்களின் தரத்திற்கு ஏற்படும் இழப்பீட்டுக்குத் தக்க நஷ்ட ஈடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் நுகர்வோர் சந்திக்கும் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்பலாம்.

2. தவறான விளம்பரம் மற்றும் முறைகேடான வர்த்தகம் தவறான விளம்பரம் மூலமாக விற்கப்படும் பொருள்கள் தவறானது எனக் கண்டறியும் பட்சத்தில், இரண்டு வருட சிறைத்தண்டனையும் ரூ.10 லட்சம் தொகையும் வசூலிக்கத்தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அதே தவற்றைச் செய்யும்பட்சத்தில், ஐந்து வருட சிறைத் தண்டனையும் ரூ.50 லட்சம் நஷ்ட ஈடும் வசூலிக்க நுகர்வோருக்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

3. நடிகர்கள் மற்றும் பிரபலங்கள்மீது தவறான விளம்பரங்களுக்கு நடவடிக்கை நடிகர்கள் மற்றும் பிரபலங்கள் தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்மூலமாக, நுகரும் பொருள்களைப் பற்றித் தவறான முறையில் விளம்பரப் படுத்தினால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இந்தச் சட்டம் வழிவகை செய்துள்ளது.

4. புகார் செய்யும் முறையில் தாராளமயம் தற்போது புதிய சட்டப்படி, நுகர்வோர்கள் எந்த இடத்தில் இருந்தும் அதாவது மாவட்டம், மாநிலம் எதுவாக இருந்தாலும், தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து நுகர்வோர் நீதிமன்றங்களை நாட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5. வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் விசாரித்தல் நுகர்வோர் புதிய சட்டத்தின்படி, சாட்சியாளரையோ புகார் தாரரையோ வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாக விசாரிக்க முடியும். இது நுகர்வோருக்குப் பெரிய வரபிரசாதமாகும்.

6. புகார் ஏன் நிராகரிக்கப்பட்டது? ஒரு நுகர்வோரின் புகாரை, புகார்தாரரை விசாரிக்காமல் ஆணையத்தால் தள்ளுபடி செய்ய முடியாது. மேலும், இது சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டிய புகார் எனில், இருவரும் பேசி தீர்த்துக்கொள்ள இந்தச் சட்டத்தில் வழிமுறை உள்ளது.

7. புகார்களை விரைவில் தீர்வு செய்தல் தற்போது அதிகமான வழக்குகள் நிலுவையில் இருப்பதால்,இந்தச் சட்டம் மூலம் விரைவில் தீர்வு காண்பதற்குப் புதிய நடைமுறைகளைக் கொண்டுவர வழிமுறை செய்யப் பட்டுள்ளது.

8. முறையற்ற வர்த்தக நடைமுறைகள் முந்தைய சட்டத்தில் முறையற்ற வர்த்தக நடைமுறைகள் இணைக்கப்படவில்லை. மேலும், ரசீது வாங்காமல் பொருள்கள் வழங்குவது, வாங்கிய பொருள்களைத் திரும்பப் பெறாமல் இருப்பது, சேவைகளை முன்கூட்டியே ரத்து செய்யமுடியாமல் போவது, முன்கூட்டியே கடனைச் செலுத்துவதை அனுமதிக்காதது, கூடுதலாக டெபாசிட் தொகையைக் கேட்பது, அதிகமாக அபராதம் கேட்பது போன்றவை புதிய சட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது.

புதிய சட்டத்தில் உற்பத்தியாளர் அல்லது சேவையை வழங்குபவர்களுக்கு அதிக பொறுப்பு இருக்கிறது. ஒரு நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் சேவையால் வாடிக்கையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் புதிய சட்டத்தின் கீழ் இழப்பீடு பெறமுடியும்.

9. உற்பத்தியாளரின் பொறுப்பு புதிய சட்டத்தில் உற்பத்தியாளர் அல்லது சேவையை வழங்கு பவர்களுக்கு அதிக பொறுப்பு இருக்கிறது. ஒரு நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் சேவையால் வாடிக்கையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படும்பட்சத்தில் புதிய சட்டத்தின்கீழ் இழப்பீடு பெறமுடியும்.

10. கலப்படத்துக்கு உண்டான தண்டனைகள் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாத கலப்படமாக இருந்தால், ஆறு மாதம் சிறைத்தண்டனையும், ரூ.1 லட்சம் அபராதமும் விதிக்கப் படும். சுமாரான பாதிப்பை ஏற்படுத்தும் கலப்படமாக இருந்தால், ஒரு வருடம் சிறைத்தண்டனையும், ரூ.3 லட்சம் அபராதமும் விதிக்கப்படும். இதன்மூலம் இனி கலப்படம் கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

இதைப்போல, பல புதிய திருத்தங்களும் வழிமுறைகளும் நுகர்வோருக்குச் சாதகமாக இந்தச் சீர்திருத்தப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் இடம்பெற்றிருப்பது ஒரு வரப்பிரசாதமாகும்.

கலப்பட பொருட்களை தயாரித்தால் தண்டனை! – புதிய நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் அமல்!

கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு மசோதா-2019 (Consumer protection act 2019) நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டம் தொடர்பான விதிமுறைகள் மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோருக்கு அதிக அதிகாரம் இந்தப் புதிய சட்டம் நுகர்வோருக்கு அதிகாரம் அளிப்பதுடன், நுகர்வோர் பாதுகாப்புக் கவுன்சில்கள், நுகர்வோர் பிரச்சினைத் தீர்வு ஆணையம், மத்தியஸ்தம், கலப்படம் மற்றும் போலிப்பொருள்கள் விற்பனை அல்லது உற்பத்திக்குத் தண்டனை போன்றவற்றின் மூலம் அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும். இந்த சட்டத்தின் மூலம் நுகர்வோரின் உரிமைகளை அமல்படுத்துதல், பாதுகாத்தல், ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தை உருவாக்க சட்டம் வகை செய்கிறது.

நுகர்வோர் உரிமைகள் மீறல்களை விசாரித்தல், புகார்கள், வழக்குகளைப் பதிவுசெய்தல், பாதுகாப்பற்ற பொருட்கள் மற்றும் சேவைகளைத் திரும்பப் பெறுதல், நியாயமற்ற வணிக நடைமுறைகள், திசைதிருப்பும் விளம்பரங்களை ரத்து செய்தல், தவறான விளம்பரங்களைத் தயாரிப்போர், அனுமதி அளிப்போர், வெளியிடுவோருக்கு அபராதம் விதித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள சிசிபிஏ-வுக்கு (Central Consumer Protection Authority) அதிகாரம் வழங்கியுள்ளது.

இ-வணிகத்தளங்கள் விதிக்கும் நியாயமற்ற வணிக நடைமுறைகளுக்கான விதிமுறைகளும் இந்தச்சட்டத்தின் கீழ்வரும். மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அமைத்தல், இ-வணிகத்தில் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைத் தடுப்பதற்கான விதிமுறைகள் வெளியிட்டுள்ளது.

எளிமையாக்கப்பட்ட நீதி நடைமுறைகள் மாநில , மாவட்ட ஆணையங்கள் தங்கள் உத்தரவுகளை மறு ஆய்வு செய்தல், நுகர்வோர் தங்கள் புகார்களை மின்னணு அடிப்படையில் தாக்கல் செய்யவும், நுகர்வோர் ஆணையங்களில் தங்கள் இருப்பிடம் அமைந்துள்ள பகுதிக்கு உட்பட்டு புகார்களைத் தாக்கல் செய்யவும் வகை செய்யும் நுகர்வோர் தாவா நீதிநடைமுறைகளை எளிதாக்க புதிய சட்டத்தில் இடமுள்ளது.

மேலும், விசாரணையை காணொளிக் காட்சி மூலம் நடத்தவும், புகார்களை விசாரணைக்கு ஏற்பதற்கான குறிப்பிட்ட 21 நாட்களுக்குள் முடிவு எடுக்கப்படாவிட்டால், அவற்றை ஏற்க அனுமதிப்பது போன்றவற்றுக்கும் புதிய சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் தீர்வு ஆணையத்தின் விதிமுறைப்படி, ரூ.5 லட்சம் வரையிலான வழக்கு தாக்கல் செய்ய கட்டணம் ஏதுமில்லை. மின்னணு அடிப்படையில் புகார்களைத் தாக்கல் செய்ய வசதி உள்ளது. அடையாளம் தெரியாத நுகர்வோர் விஷயத்தில் நுகர்வோர் நலநிதியில் கடன்பெற முடியும். காலியிடங்கள், தீர்க்கப்பட்ட வழக்குகள், நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் பிற விஷயங்கள் பற்றி மாநில ஆணையங்கள் மத்திய அரசுக்கு காலாண்டுக்கு ஒருமுறை தகவல் அளிக்கும்.

பொதுவான விதிகள் தவிர, புதிய சட்டத்தின் கீழ், மத்திய நுகர்வோர் பாதுகாப்புக் கவுன்சில் விதிகள், நுகர்வோர் தாவா தீர்வு ஆணைய விதிகள், மாநில/மாவட்ட ஆணைய உறுப்பினர்கள், தலைவரை நியமிப்பதற்கான விதிகள், மத்தியஸ்த விதிகள், மாதிரி விதிகள், இ-வணிக விதிகள், நுகர்வோர் ஆணைய நடைமுறை ஒழுங்குமுறை, மத்தியஸ்த ஒழுங்குமுறை ஆகியவையும் உள்ளன. மாநில ஆணையம் மற்றும் மாவட்ட ஆணைய நிர்வாகக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையும் இதில் அடங்கும்.

மத்திய நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில் மத்திய நுகர்வோர் நலம், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சரைத் தலைவராக கொண்டு பல்வேறு துறைகளைச் சேர்ந்த 34 உறுப்பினர்களையும் கொண்ட நுகர்வோர் பிரச்சினைகள் பற்றிய ஆலோசனை அமைப்பான மத்திய நுகர்வோர் பாதுகாப்புக் கவுன்சிலை அமைப்பதற்கு மத்திய நுகர்வோர் பாதுகாப்புக் கவுன்சில் விதிகளில் இடமுள்ளது,

நன்றி கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் - பந்தலூர் - நீலகிரி மாவட்டம்

ரேஷன் அட்டைகள் வைத்திருப்பவர்கள் நுகர்வோரா?

ஆம். ரேஷன் பொருட்களை அவர்கள் காசு கொடுத்துதான் வாங்குகிறார்கள். அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோர் நுகர்வோரா?

இல்லை. இலவச மருத்துவ வசதி பெறுவதால், அவர்கள் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நுகர்வோர் இல்லை. ஆனால், அவர்கள் மருத்துவ சிகிச்சை பெறும்போது, எந்த இடத்திலாவது பணம் கொடுத்து (அது ஒரு ரூபாயாக இருந்தாலும்) ரசிது பெற்றிருந்தால் அவர் நுகர்வோர் ஆகிறார். இப்புத்தகத்தின் நோக்கம், நுகர்வோரின் அறியாமையைப் போக்குவதுதான். அவர்கள் சந்தைகளிலும், மற்றுமுள்ள இடங்களிலும், வர்த்தகளால் ஏமாற்றப்படாமல் இருக்க, அவர்கள் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

விழிப்புணர்வுள்ள நுகர்வோருக்கு ஏமாற்றங்களும் குறைவுதான்.

நுகர்வோர் புகார்கள் ஏன் புகார் செய்ய வேண்டும்?

இந்தியாவில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, நுகர்வோர், தங்களுக்கு இழைக்கப்பட்ட எல்லா அநீதிகளையும் பொறுத்துக் கொள்பவர்களாக இருந்தனர். அது வாங்கிய பொருளில் குறையோ, அல்லது சேவையில் குறைபாடோ, எதுவாயினும் அவர்கள் ஒன்றுமே செய்யாமல் இருப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர். அப்படிப் பொறுத்துப் போவதால் உங்களுக்கு என்ன நன்மை?
நீங்கள் புகார் செய்தீர்களானால், மற்ற நுகர்வோருக்கும் அதே கஷ்டம் நேரிடுவது தவிர்க்கப்படலாம்.

யார் புகார் செய்யலாம்?

ஒரு பொருளை அல்லது சேவையை தன்னுடைய உபயோகத்துக்காக, அல்லது பயனுக்காக, வாங்குபவர்/ பெறுபவர் மட்டுமே நுகர்வோர் ஆவார். எனவே ஒரு பொருளை மற்றவர்களுக்கு விற்பதற்காக வாங்குபவர், அதாவது ஒரு வியாபாரி, உற்பத்தி செய்பவர், திருத்தி விற்பவர் ஆகியோர் நுகர்வோர் ஆகார். அவர்களுக்குக் குறை ஏற்பட்டால் அவர்கள் வேறு சட்டங்களை அணுகலாம்.

- பதிவு செய்யப்பட்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்பு
- மத்திய அரசு / மாநில அரசு
- ஒத்த நோக்கங்கொண்ட பல நுகர்வோரின் சார்பாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நுகர்வோர் கூட்டாக, புகார் செய்யலாம்.
- எப்போது புகார் பதிவு செய்யலாம்?
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி, கீழ்க் கண்ட சந்தர்ப்பங்களில் புகார் பதிவு செய்யலாம்.
- ஒரு வியாபாரி கடைப்பிடித்த, முறைகெட்ட வர்த்தகச் செயலால், உங்களுக்குக் கஷ்டமோ, நஷ்டமோ ஏற்பட்டிருந்தால்.
- நீங்கள் பெற்றுக்கொண்ட சேவையில் எந்த விதத்திலாவது குறைபாடு இருந்தால்.
- நடைமுறையில் உள்ள சட்டத்தின் விதிகளின்படி தீர்மானிக்கப்பட்ட, அல்லது அறிவிக்கப் பட்ட விலையைவிட, அதிகமான விலை உங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டிருந்தால்
- உபயோகப்படுத்தும், பொதுமக்களின் பாதுகாப்புக்கோ அல்லது உயிருக்கோ ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருளை நடைமுறையில் இருக்கும் ஒரு சட்டத்தின் விதிகளை மீறி, பொதுமக்களுக்கு விற்கப்படுகிறதென்றால். சேவைகளுக்கும் இவை பொருந்தும். எங்கே புகாரைப் பதிவு செய்வது?
- நீங்கள் ஒரு பொருளை வாங்கிய அல்லது ஒரு சேவையைப் பெற்ற, மாவட்டத்தில் அல்லது எதிர்தரப்பினர் எல்லோருமோ அல்லது ஒருவரோ வசிக்கும் / தொழில் செய்யும் அல்லது பொ ருள் / சேவை அளித்த எதிர்தரப்பினரின் கிளை அலுவலகம் அமைந்துள்ள, "மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில்" உங்கள் புகாரைப் பதிவு செய்யலாம்.

புகார் செய்வது எப்படி?

உங்கள் புகாருக்கு உரிய விளைவு ஏற்படவேண்டுமென்றால் நீங்கள் சரியான முறைகளைப் பின்பற்றிப் புகார் செய்வது நல்லது. புகார் செய்யவேண்டிய அளவுக்கு, நியாயமான குறையோ அல்லது இழப்போ, உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் முத-ல், எதிர்த்தரப்புக்கு (நீங்கள் யாருக்கு எதிராகப் புகார் செய்ய இருக்கிறீர்களோ, அவர் எதிர்த்தரப்பு என்று குறிப்பிடப்படுவர்) எழுத்து மூலம் ஒரு கடிதம் எழுதி, நீங்கள் அவரிடமிருந்து வாங்கிய பொருளில் அல்லது பெற்ற சேவையில் கண்ட உங்கள் குறையை விவரமாகத் தெரிவித்து,

அதற்கு நீங்கள் விரும்பும் பரிகாரம் என்ன என்பதையும் தெரிவிக்க வேண்டும். அக்கடிதம் அவரை அடைந்ததற்கான அத்தாட்சி தேவை (பதிவுத் தபால் ஒப்புகை சீட்டுடன் / நகல் அவர் கையெழுத்து).

உங்கள் புகார் சம்பந்தப்பட்ட எல்லாத் தகவல்களையும் மற்றும் ஆதாரங்களையும் ஒன்றாய்த் திரட்டுங்கள். ஆதாரங்கள் என்பது, நீங்கள் பொருளை வாங்கியதை உறுதி செய்யும் பில் அல்லது ரசீது, பொருளின் தன்மை பற்றி விளக்கி வெளியிடப்பட்ட விளம்பரத்தாள்அல்லது புத்தகம், முன் மதிப்பீடு, கொட்டேஷன் போன்றவை,

முடிந்தவரை, விரைவாகப் புகார் செய்யுங்கள். உங்கள் கடிதத்தில், எதிர்த்தரப்பு செயல்படுவதற்கு நியாயமான கால அவகாசம் (சுமார் 15 நாட்கள்) கொடுங்கள்.

குறிப்பு: எல்லா மூல பத்திரங்களையும்உங்களிடமே ஒரு கோப்பில் வைத்திருங்கள். அவற்றை நீதிமன்றம் சொன்னாலொழிய, வேறு எவரிடமும் கொடுக்காதீர்கள். தேவைப்படும் போதெல்லாம் "ஜெராக்ஸ்' நகல்களையே பயன்படுத்துங்கள்.

புகார் செய்வதற்கான கால வரையறை

நீங்கள் ஆதாரமாகக் குறிப்பிடும் எதிர்த்தரப்பின் குற்றத்தை ஒப்புக் கொண்ட கடிதம், நோட்டீஸ் பில், ரசீது போன்றவற்றில், எது தேதிவாரியாகக் கடைசியில் வருகிறதோ, அதனுடைய தேதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் புகாரைப் பதிவு செய்ய வேண்டும். புகாரைப் பதிவு செய்வதற்கு 5 லட்சம் வரை இழப்பீடு கேட்க நீங்கள் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. அதற்கு மேல் இழப்பீடு கேட்கும்பட்சத்தில் கட்டணம் செலுத்த வேண்டும்

பிரமாண வாக்குமூலம் கூட, ஸ்டாம்ப் பேப்பரில் இருக்க வேண்டியதில்லை.

புகாரை நுகர்வோரோ அல்லது பிரதிநிதியோ நேரில் கொடுக்கலாம் அல்லது தபால் மூலம் அனுப்பலாம். நுகர்வோர் ஆணையத்தின் உறுப்பினர் மற்றும் நீங்கள் கொடுக்கும் எதிர்தரப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு நகல் தேவைப்படும்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி பெறக்கூடிய நிவாரணங்கள்,

நுகர்வோர் நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட நிவாரணங்களை வழங்கி உத்தரவிடலாம்.

1. விற்கப்பட்ட பொருளில் உள்ள குறைகளை அகற்றுதல்
2. மாற்றுப் பொருள் தருதல்
3. பொருளின் விலையை வட்டியுடன் திருப்பித் தருதல்
4. ஏற்பட்ட கஷ்டத்துக்கும் நஷ்டத்துக்கும் ஈடுசெய்தல்
5. சேவையில் காணப்பட்ட குறைபாடுகளை அகற்றுதல்
6. முறைகெட்ட / தடைசெய்யும் வர்த்தகச் செயல்களைத் தடுத்தல் மற்றும் மேலும் தொடராதிருக்க உத்தரவிடல்
7. ஆபத்தான பொருட்களின் விற்பனையை நிறுத்துதல்
8. போதுமான செலவுத்தொகை வழங்கி உத்தரவிடல்

மேல்முறையீடுகள் செய்வதற்கான கால வரையறைகள்

மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்புக்கு எதிராக
மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் (தீர்ப்பை நீங்கள் பெற்ற நாளிலிருந்து) 30 நாட்களுக்குள்

மாநில நுகர்வோர் நீதி ஆணையத்தின் தீர்ப்புக்கு எதிராக
தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் (தீர்ப்பு பெற்ற நாளிலிருந்து) 30 நாட்களுக்குள்

தேசிய நுகர்வோர் நீதி ஆணையத்தின் தீர்ப்புக்கு எதிராக
உச்ச நீதிமன்றத்தில் (தீர்ப்பை பெற்ற நாளிலிருந்து) 30 நாட்களுக்குள்

மேல் முறையீடு செய்ய வேண்டுமானால் முறையீட்டுடன் வைப்புத் தொகையையும் செலுத்த வேண்டும். மாநில ஆணையத்தில் இது மாவட்டம் அளித்த தொகையில் பாதி. ஆனால் இதன் உயர் வரம்பு ரூ.25,000/. தேசிய ஆணையத்தில் இது மாநில ஆணையம் அளித்த தொகையில் பாதி. இதன் உயர் வரம்பு ரூ. 35,000 சுப்ரீம் கோர்ட்டில் இது தேசிய ஆணையம் அளித்த தொகையில் பாதி. ஆனால் இதன் உயர் வரம்பு ரூ.50,000/. புகாரைப் பதிவு செய்யும் முறையில் எந்த மாற்றமும் இல்லை. எனினும், உங்கள் விண்ணப்பத்துடன், கீழ் நீதிமன்றத்தின் அசல் உத்தரவை இணைத்து, என்ன காரணத்திற்கா க நீங்கள் அதை எதிர்க்கிறீர்கள் என்பதை தெளிவாகச் சொல்ல வேண்டும்.

குறிப்பு : மேல் முறையீடுகளைப் பதிவு செய்வதற்கான காலகெடுவாகிய 30 நாட்கள் என்பது, கீழ் நீதிமன்றத்தின் உத்தரவு உங்கள் கையில் கிடைத்த நாளிலிருந்து ஆரம்பிக்கிறது.

நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் புகாரைப் பதிவு செய்யும் முறை

முதல் கட்டம் :எதிர்த் தரப்புக்கு நோட்டீஸ் பின்வரும் மாதிரிப் படிவத்தில் உள்ளபடி அனுப்ப வேண்டும்.

2ஆம் கட்டம் :புகாரை, பின்வரும் மாதிரிப் படிவத்தின்படி தயார் செய்து மன்றத்தில் அளிக்க வேண்டும்.

3 ஆம் கட்டம் :பிரமாண வாக்கு மூலம் பின்வரும் படிவத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டு, அதனுடன் நீங்கள் முன்னதாக எதிர்த் தரப்புக்கு அனுப்பிய நோட்டீஸ் மற்றும் பில், ரசீது போன்றவற்றின் நகல்களோடு, மேலும் புகாரையும் சேர்த்து நுகர்வோர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

4 ஆம் கட்டம் :தீர்ப்பு வழங்கப்பட்ட பின், விதிக்கப்பட்ட கால கெடுவுக்குள் எதிர்த்தரப்பு, அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்ட செயலைச் செய்யத் தவறினால், பின்வரும் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் செயல்படுத்தும் விண்ணப்பம்" தயாரித்து நீதிமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

5 ஆம் கட்டம் :தீர்ப்பு உங்களுக்கு நிறைவளிக்கா விட்டால், உங்களுக்கு நியாயம் மறுக்கப்பட்டதென்று நீங்கள் கருதினால், பின்வரும் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் மேல் முறையீடு செய்யலாம்.

முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள்

புகாரில் கீழ்க்கண்ட விவரங்கள் / தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும்.

- புகார் செய்பவரின் பெயரும், முழு விலாசமும்
- எதிர்த் தரப்பில் உள்ளவரின் / உள்ளவர்களின் பெயர் / பெயர்கள் மற்றும் முழு விலாசங்கள்
- பொருளை வாங்கிய அல்லது சேவையைப் பெற்ற தேதி, அதற்காகக் கொடுக்கப்பட்ட தொகை / விலை.
- வாங்கிய பொருளின் பெயர், செயல் அல்லது பயன், அளவு போன்ற விவரங்கள்
- புகார் முறையில்லா வர்த்தகச் செயலைப் பற்றியோ, குறையுள்ள பொருளைப் பற்றியோ, சேவையில் குறைபாடு பற்றியோ அல்லது அதிக விலை வசூலிக்கப்பட்டது குறித்தோ அல்லது வேறு எதற்காக என்ற விவரம்.
- பில்கள், ரசீதுகள், வவுச்சர்கள், கடிதங்கள் போன்றவற்றின் நகல்கள் இணைக்கப்பட்டுள்ள விவரம்.
- செயல்படுத்தும் விண்ணப்பங்களில் எதிர் தரப்பின்/தரப்பினரின் பெயர்கள் கொடுக்கப்பட வேண்டும்.

எதிர்த்தரப்புக்கு அனுப்பப்பட வேண்டிய நோட்டீஸின் படிவம்

(இது நுகர்வோர் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான முதல் செயலாகும். இந்த நோட்டீஸ் எதிர்த்தரப்புக்கு உங்களால், பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது கடித நகலில் அவர்களது கையெழுத்து பெறலாம்.)

மாதிரிப் படிவம் **தேதி :**

அனுப்புபவர் : உங்கள் பெயரும், முகவரியும்

பெறுபவர் : எதிர்த்தரப்பின் பெயரும், முகவரியும்

அன்புள்ள ஐயா,

பார்வை : .... பெற்றதற்கு, உங்கள் தேதியிட்ட பில் எண்.....................

1. எனக்கு .... பொருள் / சேவை அளித்தீர்கள். அதிலுள்ள குறைபாடுகளை இதன் கீழ் கொடுக்கிறேன். (விவரமாக எழுதவும்)

2. (இந்த பத்தியில் நீங்கள் இதற்கு முன்பு அவர்களுடன் எத்தனை முறை குறையைக் குறிப்பிட்டு, எழுத்து மூலம் தொடர்பு கொண்டீர்கள் என்பதை நினைவுபடுத்தவும்)

3. (அவர்கள் 15 நாட்களுக்குள்) ""குறையைச் சரிசெய்ய வேண்டும் அல்லது புதிய பொருள் கொடுக்க வேண்டும் அல்லது அதன் விலையைத் திருப்பித் தர வேண்டும்" என்றும், அப்படி அவர்கள் செய்யத் தவறினால் நுகர்வோர் ஆணையத்தில் புகார் செய்வதைத் தவிர உங்களுக்கு வேறு வழியில்லை என்று நீங்கள் கருதுவதாகத் தெரிவிக்கவும்) இப்படிக்கு,

உங்கள் கையொப்பம்

CCHEP Regd No:34/2005

புகாரின் மாதிரிப் படிவம்

.....,,,,,,,,,,,,,,, (நகரில்) உள்ள, மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக அல்லது
.... (நகரில்) உள்ள, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக அல்லது
புதுடில்லியில் உள்ள தேசிய நுகர்வோர் நீதி ஆணையம் முன்பாக
எஸ் ஆர் எண் : (புகார் வாங்கியதற்கான வரிசை எண்)
ஒ.பி.எண்: (புகாரை ஏற்றதற்கான புகார் எண்)

1. பெயர், விலாசம் ....

2. பெயர், விலாசம் புகார் செய்பவர்கள் எதிராக

3. பெயர், விலாசம் ....

4. பெயர், விலாசம் எதிர்த்தரப்பினர்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 ன் படி, செய்யப்படும் புகார்

இங்கே உங்கள் புகாரைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதுங்கள். நீங்கள் பொருளுக்கு அல்லது சேவைக்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள், அதை எந்த விதமாகக் கொடுத்தீர்கள் (காசாகவா, காசோலை யாகவோ) என்பதையும் எழுதி, உங்களிடமிருக்கும் பில்லின் நகலை இணைக்கவும். பொருளில் என்ன குறை அல்லது சேவையில் என்ன குறைபாடு என்பதை எழுதுங்கள். எதற்கெல்லாம் ஆதாரம் இருக்கிறதோ அதையெல்லாம் இணைக்கவும்.

நீங்கள் எதிர்த் தரப்பிடம் அணுகி தீர்வு காண முயன்றது பற்றிய விவரங்கள் முழுவதையும் எழுதுங்கள். அவர்கள் உங்களுக்கு ஏதாவது பதில் அனுப்பியிருந்தால் அதன் நகலை இணைக்கவும். அந்த குறை அல்லது குறைபாட்டினால் நீங்கள் எந்த விதமாகப் பாதிக்கப்பட்டீர்கள் என்பதையும் எழுதுங்கள் (குறிப்பாக, உங்களுக்கு அந்தக் குறை காரணமாக உடலில் காயம் ஏற்பட்டிருந்தலோ, உங்களுக்கு அதனால் செலவு ஏற்பட்டிருந்தாலோ, அதன் விவரங்களை ஆதாரங்களுடன் தெரிவிக்கவும்).

வரையறைகள்

அ. புகார் இரண்டு ஆண்டுக் கால வரம்புக்குள் செய்யப்படுகிறது என்பதை விளக்கவும்.
ஆ.புகார் அந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டதுதான் என்பதைத் தெரிவிக்கவும்.
இ.நீங்கள் கோரும் ஈட்டுத்தொகை அந்த நீதிமன்றத்தின் பணவரம்புக்கு உட்பட்டதே என்பதையும் விளக்கவும்.

வேண்டுகோள்

மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில், நீதி மன்றம் மனமிரங்கி எதிர்த்தரப்புக்குக் கீழ்க்கண்டவாறு உத்தரவிட வேண்டுமென்று புகார் செய்பவர் கேட்க வேண்டும்.

அ. (பொருளில் உள்ள குறையைச் சரிசெய்ய வேண்டும் அல்லது புதியது தரவேண்டும் அல்லது விலையைத் திருப்பித் தரவேண்டும், வட்டியோடு தரவேண்டும், செலவையும் வட்டியோடு தரவேண்டும் என்று கேட்கவேண்டும்). (தொகையைக் குறிப்பிடவும்)

ஆ. (உடலில் ஏற்பட்ட தொல்லைகளுக்கோ, மன உளைச்சலுக்கோ ஈடாக இன்ன தொகை எதிர்த்தரப்பால் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்க வேண்டும்.)

இ. (இந்தப் புகாரைப் பதிவு செய்வதற்கும், பின்தொடர்வதற்கும் ஆன செலவு இவ்வளவு என்ற விவரம்) (மொத்தத் தொகை).

.... ஆண்டு .... மாதம் தேதி எழுதப்பட்டது.

தேதி :.. ,,,(கையொப்பம்)

உறுதிமொழி

.... என்ற முகவரியில் வசிக்கும், ... வயதான, திரு......................... அவர்களின் மகனாகிய / மனைவியாகிய ஆகிய நான், மேலே உள்ள புகாரில் கூறப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் நான் அறிந்தபடியும், எனக்குத் தகவல் அளிக்கப்பட்ட படியும், நம்பிக்கை கொண்ட படியும் முற்றிலும் உண்மையானவை என்று மனமார உறுதி செய்கிறேன்.
....(கையொப்பம்)

குறிப்பு :

1. புகாரில் குறிப்பிட்ட எல்லா சான்று ஆவணங்களையும் வரிசைப்படி எண்கள் இட்டு அவற்றின் நகல்களை இணைக்கவும்.

2. நகல்கள் அனைத்தும் உண்மை நகல்களே என்பதை உறுதி செய்து ஒவ்வொன்றிலும், புகார் செய்பவர் கையெழுத்திட வேண்டும்.

பிரமாண வாக்குமூலத்தின் மாதிரிப் படிவம்

.... இல் உள்ள மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக அல்லது

.... இல் உள்ள மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பாக அல்லது

புதுதில்லி தேசிய நுகர்வோர் நீதி ஆணையம் முன்பாக

எஸ் ஆர் எண் : .... ஒ.பி.எண்: ....

மேல்முறையீட்டின் மாதிரிப் படிவம்

.... இல் உள்ள மாநில – தேசிய நுகர்வோர் நீதி ஆணையம் முன்பாக

எஸ் ஆர் எண் : .... ஒ.பி.எண்: ....

1. ....
2. .... # புகார் செய்பவர்கள்

எதிர்

1. ....
2. .... # எதிர்த் தரப்பினர்

வாக்குமூலம்

.... என்ற முகவரியில் வசிக்கும் .... வயதான, திரு. ....,, அவர்களின் மகனாகிய / மனைவியான .... ஆகிய நான், பதிவு செய்துள்ள புகாரில் கூறப்பட்டுள்ள விவரங்கள்யாவும், நான் அறிந்தபடியும், எனக்குத் தெரிவிக்கப்பட்டபடியும், நான் நம்பிக்கை கொண்டபடியும், முற்றிலும் உண்மையானவையே என்று மனப்பூர்வமாக உறுதி செய்கிறேன்.

முழுமையான விவரங்களுக்குப் புகாரைப் பார்த்து அறிந்துகொள்ளலாம். (நீங்கள் எதிர்த்தரப்பினர் கூறியுள்ள எதையாவது மறுத்துச் சொல்ல வேண்டியயிருந்தால், அத்தகைய விவரங்களை, ஒவ்வொரு விவரத்தையும் தனித்தனி பாராக்களில் உங்கள் கருத்தை தெரிவித்துத் தெளிவாக மறுக்க வேண்டும்).

.... ஆண்டு .... மாதம் .... தேதியில் எழுதப்பட்டது.

தேதி : ....(கையொப்பம்)

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு எண் 15 இன் படிச் செய்யப்படும் மேல்முறையீடு மனு

சுருக்கமான தகவல்கள் உங்கள் புகாரின் பல்வேறு விஷயங்களைத் தெளிவாகத் தனித்தனி பாராக்களில் எழுதவும்.

மேல்முறையீட்டுக்கான காரணங்கள்

நீங்கள் எதற்காக மேல்முறையீடு செய்கிறீர்கள் என்பது விளக்கப்பட வேண்டும். தனித்தனி பாராக்களில், கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் எந்தப் பகுதி உங்களுக்கு நியாயம் வழங்கத் தவறி விட்டது. அது எப்படி, ஏன் திருத்தப்பட வேண்டும் என்பதை விவரமாக எடுத்துரைக்கவும்.

வேண்டுகோள்

(நீங்கள் முதல் புகாரில் செய்த வேண்டுகோளை மீண்டும் இங்கேயும் தெரிவிக்கவும்.)

.... ஆண்டு.................... மாதம் தேதி எழுதப்பட்டது.

தேதி : .... (கையொப்பம்)

தீர்ப்பை அமல்படுத்தக் கோரும் விண்ணப்பத்துடன் கொடுக்கவேண்டிய வாக்குமூலப் படிவம்

(மாதிரிப் படிவம்)

.... இல் உள்ள மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பு

அல்லது

.... இல் உள்ள மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பு

அல்லது

புதுடில்-யில் உள்ள தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் முன்பு

எஸ். ஆர். எண் : .... ஈ. பி. எண்: ....

1. ....
2. .... புகார் செய்பவர்கள்

எதிர்

1. ....
2. .... எதிர்த்தரப்பினர்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் . 2019 இன் படி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்

இணைக்கப்பட்டுள்ள வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக, மாண்புமிகு நீதிமன்றம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 இன் படி, எதிர்த்தரப்பினரை, அவர்கள் இந்த மன்றத்தின், ... தேதியிட்ட, உத்தரவின்படி நடக்கத் தவறியதற்காக கைது செய்ய உத்தரவிட்டு, மாண்புமிகு நீதிமன்றம் நியாயம் வழங்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளப்படுகிறது.

(அல்லது, பிரிவு 25ன் படி எதிர்த்தரப்பினரின் சொத்துக்களைக் கையகப்படுத்தி, விற்று உங்களுக்குச் சேர வேண்டியதை கொடுக்கவும் என்று கேட்கவும்).

.... ஆண்டு .... மாதம் தேதியில் சமர்ப்பிக்கப்பட்டது.

தேதி : .... கையெழுத்து

நன்றிகள்

என்றும் நுகர்வோர் விழிப்புணர்வு பணியில்

விழித்தெழு

விழித்திரு.

விழிப்புடன் இரு

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம்

Gudalur CONSUMER HUMAN RESOURCE & ENVIRONMENT PROTECTION Center CCHEP_NLG

CCHEP Regd No:34/2005

தமிழ்நாடு அரசின் மாநில அங்கீகாரம் பெற்றது

அங்கீகாரம் எண் நுபா2.22881-2013.

பந்தலூர், பந்தலூர் (Po & Tk) நீலகிரி CCHEP _ NLG Pandalur, The Nilgiris - 643 233.

Web: www.cchepnlg.blogspot.com www.cchepeye.blogspot.com.

Email : cchepnlg@gmail.com, cchepnlg5@gmail.com cchepnlg3@gmail.com, cchepnlg2@gmail.com ccc.nilgiris@gmail.com cchep.siva@gmail.com

https://www.facebook.com/cchepnilgiris https://www.facebook.com/cchepnlg2